ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2357/45 - 2023 නොවැම්බර් මස 10 වැනි සිකුරාදා - 2023.11.10

2357/45 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: BD/RM/LND.2/PMLMC.
காணி அமைச்சின் இலக்கம்:4/3/9/2015/IR/102.

மொரான நீர்த்திட்டத்தின் இடதுபுற நீரோடையை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தின் ரிதீமாலியத்த பிரதேச செயலகத்திற்குட்பட்ட இல. 10 ஏ, குடாலுனுக கிராம அலுவலர் பிரிவின் குடாலுனுக ஊரில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் மூலம் வரையப்பட்ட வரைபட இல. 710021 இன் தொகுதி இல. 08, பத்திர இல. 04 இல் குறிப்பிடப்பட் டுள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

காணியின் முழு விஸ்தீரணம் 0.4133 ஹெக்டயார்.

**01. துண்டு இல. 157**

காணியின் பெயர்: பஹலவத்த; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஹேரத் முதியன்சேலாகே லீலாவதி; விஸ்தீரணம்: 0.3025 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 159**

காணியின் பெயர்: பஹலவத்த; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஹேரத் முதியன்சேலாகே கருணாரத்ன; விஸ்தீரணம்: 0.1108 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம்


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு பிரதேச செயலகத்தில் என் முன்னிலையில் வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி. டி. எஸ். தக்சிலா குணரத்ன,
பிரதேச செயலாளர்,
ரிதீமாலியத்த.

பிரதேச செயலகம்,
ரிதீமாலியத்த.
2023, நவெம்பர் 02.

EOG 11 - 0094